Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. 266/**2019**

**Depostitions of PW- 2 Witness for**

| | |
|---|---|
| Name | செய்யது அலி பாதுஷா |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of October 2023

Signature of Witness.

05.10.2023

1 ம் எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 2 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை–**

நான் தற்போது தென்காசி கீழபாரடி தெருவில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 சேக் அலி எனக்கு தெரியும். அவர் எனது ஓனர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி பரமசிவத்தையும் தெரியும். திருவில்லிபுத்துர் தேரடி ஸ்டாப்பில் அ.சா.1 பார்டர் ரகமத் என்ற பெயரில் சாப்பாடு கடை வைத்திருந்தார். அதில் நான் பரோட்டா மாஸ்டராக வேலை செய்து வந்தேன். தேதி மாதம் நியாபகம் இல்லை. சுமார் 8,9 வருடங்கள் இருக்கும். ஒரு நாள் மதியம் எதிரிகள் எங்கள் ஹோட்டலுக்கு சாப்பிட வந்தார்கள். அவர்களுக்குள்ளேயே பேசி

சண்டை போட்டுக்கொண்டார்கள். நானும், அ.சா.1 ம் அவர்களை விலக்கி விட போனோம். அப்ே்பாது எதிரிகளுக்குள்ளேயே சண்டை அதிகமாக ஆகிவிட்டது. ஆபாசமான வார்த்தைகளால் பேசினார்கள். தேவிடியா மகன்களா, புண்டா மகன்களா என்று பேசினார்கள். நாங்கள் விலக்கிவிட முயற்சி செய்தும் முடியவில்லை. எங்களுடனும் சண்டைக்கு வந்துவிட்டார்கள். ஆக்கி வைத்திருந்த மட்டன் பிரியாணியை கீழே தள்ளிவி்ட்டுவிட்டார்கள். அப்போதுதான் பிரியாணி ஆக்கிவைக்கப்பட்டிருந்தது. அதனால் நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் . போலீசார் எங்களை விசாரித்தார்கள். எதிரிகள் தள்ளிவிட்டு வீணாக்கிய பிரியாணியின் மதிப்பு ரூ.5000/- இருக்கும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>-**

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.